RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 38 | பிப்ரவரி.14 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்வு” : மு.க.ஸ்டாலின் வாக்குறுதி

சென்னை: பிப்.14-

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் என அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், “மிகவும் முக்கியமான விஷயத்துக்காக தான் இந்த வீடியோ. நேற்று காலை அரசு சார்பில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்ட பயனாளிகளுக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவாக வந்திருக்கும்.

எதற்காக இந்த பணம் என்றால், நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது கரோனா நோய் பரவலின் தாக்கம் உச்சத்தில் இருந்தது. அதை சமாளித்து மக்களின் உயிரை காத்தது மட்டுமல்லாது வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகையும் வழங்கினோம். முந்தைய ஆட்சியில் விட்டுச் சென்ற நிதி நெருக்கடியை சமாளித்து ஆட்சிக்கு வந்ததும் பல திட்டங்களை நிறைவேற்றினோம்.

ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு முன்பாக மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்தேன். அப்போது இது சாத்தியமே இல்லை என சிலர் சொல்லி இருந்தார்கள். இருப்பினும் நிதி நெருக்கடியை சமாளித்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை மீறி கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம். முதலில் 1.13 கோடி மகளிருக்கு பயனளித்து வந்த இந்த திட்டமானது அண்மையில் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது 1.31 கோடி மகளிர் பயன் பெற்று வருகின்றனர்.



இது வெறும் நிதியுதவி மட்டுமல்ல. சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலான உரிமைத் தொகை. இதை கொண்டு அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தினரின் மருத்துவச் செலவுகள், குழந்தைகளின் கல்விச் செலவுகள் என பல அத்தியாவசிய செலவுகளை மகளிர் தாங்களாவே மேற்கொள்ள இந்த திட்டம் வழிவகுக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு மாதமும் 15ம் தேதியை திட்ட பயனாளர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற நாளாக அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த இந்த திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றன.

இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வருகின்றோம். அதற்கு எதிராக டெல்லியில் உள்ள ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக உள்ள மற்றொரு கூட்டமும் எதிர்வரும் தேர்தலை காரணம் காட்டி அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கான சூழ்ச்சி செய்வதாக தகவல். இது சார்ந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாக செய்திகள் வருகிறது.

1.31 கோடி மகளிர் பயனடையும் இந்த திட்டத்தை மூன்று மாதங்கள் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என்பதை உங்கள் வீட்டில் ஒருவராக உள்ள எனக்கு நன்றாகவே தெரியும். கடும் வெயிலில் வேலைக்கு செல்ல கடினமாக இருக்கும் கோடை காலத்தில் இந்த தொகை நிறுத்தப்பட்டால் உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என்பது எனக்கு தெரியும். உங்கள் மாதாந்திர செலவை எப்படி சமாளிக்க முடியும். குடும்பத்தினருக்கு மாத்திரை மருந்து வாங்கித் தர முடியுமா? தேர்வு நேரத்தில் குழந்தைகளுக்கான கல்விச் செலவை சமாளிக்க முடியுமா? இதையெல்லாம் எண்ணி பார்த்துதான் முக்கியமான முடிவை எடுத்துள்ளேன்.

அதன்படி இந்த பிப்ரவரி மாதம் மட்டுமல்லாது அடுத்த இரண்டு மாதங்களான மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகையையும் சேர்த்து ரூ.3 ஆயிரம், கூடுதலாக கோடை கால செலவை கருத்தில் கொண்டு மேலும் ரூ.2 ஆயிரம் சிறப்பு தொகையும் சேர்த்து இந்த பிப்ரவரி மாதம் ரூ.5 ஆயிரத்தை சிறப்பு மகளிர் உரிமைத் தொகையாக 1.31 கோடி மகளிருக்கு வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தருணத்தில் உன்னொரு அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த மூன்று மாதங்களுக்கு நீங்கள் பயன்படுத்த வேண்டி உள்ளது. அதனால் கொஞ்சம் கவனமாக செலவிடுங்கள். முடிந்தவரை சேமிக்கவும் பாருங்கள்.

அன்பு சகோதரிகளே, உங்கள் ஆதரவோடு அடுத்து அமைய உள்ளதும் திராவிட மாடல் ஆட்சிதான். அதனால் உங்கள் மனம் குளிரும் சிறப்பான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உங்களுக்கான உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். சொன்னதை செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி இது.

இதை எப்படி செய்வீர்கள் என சிலர் கேட்கலாம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் வளர்ச்சி பெற செய்துள்ளோம். அதனால் எந்த தடை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி ‘தமிழ்நாடே’ வெல்வோம் ஒன்றாக” என்றார் முதல்வர் ஸ்டாலின்.



## நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கட்டம் நிறைவு

### இரு அவைகளும் மார்ச் 9க்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி: பிப்.14-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கட்டம் இன்றுடன் நிறைவடைந்தது. இரண்டாம் கட்டம் மார்ச் 9ம் தேதி கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 28ம் தேதி, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் உரையுடன் தொடங்கியது. ஓய்வுபெற்ற ராணுவத் தளபதி நரவனேவின் வெளியிடப்படாத நினைவுக் குறிப்பு புத்தகத்தில், இந்தியா சீனா இடையேயான கல்வாண் மோதல் தொடர்பாக தெரிவிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படும் ஒரு விஷயத்தை மக்களவையில் ராகுல் காந்தி எழுப்ப முயன்றார். இதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததை அடுத்து, எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

பிப்ரவரி 2ம் தேதி முதல் தினமும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. தொடர்ந்து இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அமெரிக்காவின் அழுத்தத்துக்கு இந்தியா பணிந்து விட்டதாகவும், பாரத மாதாவை விற்று விட்டதாகவும் குற்றம் சாட்டினார். இந்த விவகாரமும் நாடாளுமன்றத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக, எப்ஸ்டீன் கோப்புகளில் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியின் பெயர் இடம் பெற்றிருப்பதாகக் கூறி அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மக்களவை தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி பதில் அளிப்பதாக இருந்தது. ஆனால், அவர் அவைக்கு வந்தால் விரும்பத்தகாத நிகழ்வை அரங்கேற்ற எதிர்க்கட்சி எம்பிக்கள் திட்டமிட்டிருந்ததாகக் கூறிய சபாநாயகர் ஓம் பிர்லா, பிரதமரை அவைக்கு வர வேண்டாம் என கேட்டுக்கொண்டார். எனினும், மாநிலங்களவையில் பிரதமர் மோடி தனது உரையை நிகழ்த்தினார்.

பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், பல மணி நேரங்கள் வீணடிக்கப்பட்டன. இன்றும் இந்த விவகாரங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பின. இதன் காரணமாக மக்களவை முதலில் பகல் 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், மார்ச் 9ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதே போல், மாநிலங்களவையை மார்ச் 9 வரை ஒத்திவைப்பதாக அதன் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

ஏற்கெனவே திட்டமிட்டபடி மூன்று வார கால இடைவெளிக்குப் பிறகு நாடாளுமன்றம் மீண்டும் கூட உள்ளது. பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு அமைச்சகங்களுக்கான ஒதுக்கீடுகளை நிலைக்குழுக்கள் ஆய்வு செய்வதற்காக இந்த கால இடைவெளி வழங்கப்பட்டுள்ளது.

## “ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன் கூட விஜய்க்கு இல்லை!” பழனிசாமி தாக்கு

ஆம்பூர்: பிப்.14-

“கரூரில் ஒரு பிரச்சினை நடந்தது. 72 நாட்கள் விஜய் வீட்டை விட்டே வெளியே வரவில்லை. ஒரு பிரச்சினை நடந்தவுடன் 15 நாள் கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு சென்றுவிட்டார். அப்புறம் எப்படி கட்சி நடத்தி மக்களுக்கு நல்லது செய்யப் போகிறார். ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன்கூட அவருக்கு இல்லை” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

ஆம்பூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “சட்டப்பேரவை தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை நிறுத்தி விடுவார்கள் என எங்களையும், பாஜகவையும் குறிப்பிட்டு முதல்வர் ஸ்டாலின் சொல்லி யிருக்கிறார். 2024 மக்களவைத் தேர்தலின்போது உரிமைத் தொகை நிறுத்தப்படவில்லை. அப்படி இருக்கையில் எப்படி வரும் தேர்தலில் நிறுத்த முடியும். ஒரு திட்டம் செயல்பாட்டில் இருக்கும்போது, அதனை தேர்தல் நேரத்தில் நிறுத்த முடியாது என்பதை நாடே அறியும்.

2026 தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில்தான் இந்த ரூ.5000 அறிவிப்பை வெளியிட்டுள்ளார். வரும் மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாக கொடுத்துள்ளார். மேலும், கோடை காலத்துக்காக ரூ.2000 சிறப்புத் தொகையும் கொடுத்துள்ளார்.





திமுக ஆட்சிக்கு வந்தபின்னர் 2022 முதல் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலம் வருகிறது, அப்படியானால் 2026ல் தேர்தல் வரும்போது மட்டும்தான் ஸ்டாலினுக்கு கோடை காலம் தெரிகிறதா?

திமுக மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது, அதனால் இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளார். பெண்கள் படும் கஷ்டங்களை பார்த்து உரிமைத் தொகையை கொடுக்கவில்லை. சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று அஞ்சித்தான் இந்த பணத்தை கொடுக்கின்றார், வாக்குகளைப் பெறுவதற்காக.

வரும் 3 மாதம் உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்றால் மகளிர் கஷ்டப்படுவார்கள் என ஸ்டாலின் சொல்லியுள்ளார். 2021 தேர்தலின்போது மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார். ஆனால், திமுக ஆட்சியமைத்து 27 மாதம் கழித்துதான் உரிமைத் தொகையை வழங்கினார். நாங்கள் தொடர்ந்து சட்டப்பேரவையில் அழுத்தம் கொடுத்ததால் தான் அப்போதும் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. 27 மாதம் தாமதமாக உரிமைத் தொகை பெற்ற பெண்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்களா?

20 லட்சம் பெண்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. அவர்களுக்கு 55 மாதங்களாக அந்தத் தொகை வழங்கப்படவில்லை. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்களா?

ஜெயலலிதா கொண்டுவந்த மடிக்கணினி திட்டத்தை முடக்கிவிட்டு, தேர்தலுக்கு முன்னதாக திமுக அரசு கொடுக்கிறது. உரிய நேரத்தில் மடிக்கணினி வழங்கப்படாததால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்” எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், “தமிழகம் வரும் அமித் ஷாவை சந்திப்பது குறித்து முடிவும் இல்லை. அதிமுக கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் வரவுள்ளன. தவெகவின் வருகை யாரை பாதிக்கும் எனத் தெரியவில்லை. விஜய் இன்னும் ஒரு தேர்தலைக் கூட சந்திக்கவில்லை. அவர்கள் தேர்தலை சந்தித்தால்தான் என்ன செல்வாக்கு உள்ளது எனத் தெரியும். தமிழக மக்கள் விழிப்புணர்வு கொண்டவர்கள்.

விஜய்க்கு என்ன தெரியும்? கரூரில் ஒரு பிரச்சினை நடந்தது, 72 நாட்கள் அவர் வீட்டை விட்டே வெளியே வரவில்லை. ஏன் வீட்டை விட்டு வெளியே வரவில்லை என கேட்பதாக விஜய் சொல்கிறார். தலைவர் என்றால் கேள்வி கேட்கத்தான் செய்வார்கள். பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நீங்கள் எவ்வளவு கேள்வி கேட்கிறீர்கள்.

ஒரு கட்சியை நடத்தினால், நிருபர்கள், மக்கள் கேட்கும் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியது தலைவரின் கடமை. அதனை அவர் செய்துள்ளாரா? பிரச்சினை நடந்தவுடன் 15 நாட்கள் கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு சென்றுவிட்டார். அப்புறம் எப்படி கட்சி நடத்தி மக்களுக்கு நல்லது செய்யப் போகிறார். ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன்கூட அவருக்கு இல்லை. இது ஜனநாயக நாடு. யாரும் கட்சி தொடங்கலாம். மக்கள் அங்கிகரித்தால் வெற்றி பெறலாம்” என்றார்

## “கூட்டணி கட்சிகள் திமுகவுக்கு தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன” : செல்லூர் ராஜூ கிண்டல்

மதுரை: பிப்.14-

டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்து விவகாரத்தில் எதிர்குரல் கொடுக்காமல், கூட்டணி கட்சிகள் திமுகவுக்கு தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன என முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார்.

‘விடியா ஆட்சி, உங்கள் வீட்டு பில்லே சாட்சி’ என்ற தலைப்பில், அதிமுக சார்பில் பிரச்சாரம் நடை பெற்று வருகிறது. இது தொடர்பான செயலி மூலம் வீடுகள்தோறும் கணக்கெடுக்கும் பணியை, முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மதுரையில் தொடங்கி வைத்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தாலிக்கு தங்கம், மினி கிளினிக், மடிக்கணினி திட்டம் உள்ளிட்டவற்றை திமுக நிறுத்தி விட்டது தொடர்பாக, புதிதாக தொடங்கப்பட்டுள்ள செயலி மூலம் மக்களிடம் நேரடியாகச் சென்று சர்வே எடுக்கவுள்ளோம். திமுக ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை ரத்து செய்வோம் எனக் கூறிவிட்டு, டிஎன்பிஎஸ்சி தேர்வை ரத்து செய்ததுதான் சாதனையாக உள்ளது.

டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்து போன்ற நடவடிக்கைகளுக்கு திமுக கூட்டணிக் கட்சிகள் எதிர்த்து குரல் கொடுக்காமல், தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன. காங்கிரஸ் எதிர்த்து குரல் கொடுக்கிறது.

திருமாவளவனுக்கு தனது கட்சியை பிரித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் பேசாமல் உள்ளார். நாட்டிலேயே தமிழகத்தில் தான் தலித்துகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக, புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு, தமிழகத்தில் இருந்து எந்த கம்யூனிஸ்ட் கட்சிகளும் குரல் கொடுக்கவில்லை. விலைவாசி உயர்வு இல்லை, சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கப்படுகிறது, போதைப்பொருள் நடமாட்டம் இல்லாத நல்லாட்சி கொடுக்கிறேன் என நடிகர் வடிவேலு போல் திமுகவினர் முதல்வரை புலம்ப வைத்துள்ளனர். திமுக நல்லாட்சி கொடுக்கிறது என்பதை மக்கள்தான் கூற வேண்டும் என்று கூறினார்.



■ மதுரை அண்ணாநகரில் நவீன தொழில் நுட்ப கருவிகளுடன் கூடிய ஒலிம்பிக் ஜெராக்ஸ் நிறுவனத்தை தமிழ் நாடு வர்த்தக மற்றும் தொழில் துறை சங்கத்தின் தலைவர் Dr N ஜெகதீசன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். உடன்நிறுவனர் முஹம்மது ரபீக் ராஜா, ஷமீம் ஆயிஷா. மகமுதா பேகம், ஜமான் மற்றும் முகமது ரஃபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊத்துக்கோட்டையில் பேரூர் திமுக சார்பில் மத்திய அரசை கண்டித்துகண்டன ஆற்பாட்டம்

திருவள்ளூர், பிப்.14-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சார்பில் பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 12.02.2026 அன்று மாலை 5:00 மணியளவில் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் VAO அலுவலகம் எதிரில் நடைபெற்றது இந்த ஆற்பாட்டத்தில் மேலிட பொறுப்பாளர் உமாம கேஸ்வரி மற்றும் பேரூர் செயலாளர் அபிராமி குமர வேல், பேரூராட்சி தலைவர் A.அப்துல்ரஷீத், துணைத் தலைவர் K.R.குமரவேல், பொரு லாளர் K.C.ஜெயராமன், பேரூர் அவைத்தலைவர் S.வெங்கடேசன், கவுன்சிலர்கள் கல்பனா



பார்த்தீபன், சுபலதாநரேஷ், திரிபூரசுந்தரி ஜெய்கனேஷ், மற்றும் தமிழ்ச்செல்வன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் பிரபாவதி, மாலா, மற்றும் காங்கிரஸ் கட்சி சார்பில் பேரூர் தலைவர் K.கோவிந்தசாமி, CPIML மாவட்ட செயலாளர் மெய்யூர் அன்பு, கலந்து கொண்டு மத்திய பாஜக மற்றும் அதிமுக கட்சிக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆற்பாட்டத்தில் ஈடுபட்டனர் இந்த ஆற்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்துகொண்டனர்

# எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பாலவாக்கத்தில் பாஜக மற்றும் அதிமுகவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர், பிப்.14-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பாலவாக்கத்தில் பாஜக அதிமுக அரசை கண்டித்து மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகள் இணைந்து நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டம் 12.02.2026 அன்று மாலை 5:30 மணி அளவில் பேருந்து நிலைய அருகில் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எல்லாம் அப்புறம் வடக்கு ஒன்றிய செயலாளர் தலைமை பொதுக்குழு உறுப்பினருமான பிஜே மூர்த்தி தலைமை வகித்தார்

தலைமை கழக பேச்சாளர் பொன்னேரி சிவா மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஜெயலலிதா சசிதரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே வி லோகேஷ் மாவட்ட பிரதி



நிதிகள் சிவசங்கர் ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் யசோதா, காங்கிரஸ் கட்சி சார்பில் மூர்த்தி மற்றும் சிவா, சத்யா, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் எல்லாபுரம் ஒன்றியச்செயலாளர் அறிவுச்செல்வன், மாவட்ட நிர்வாகிகள் கவிஞர்ஜீவா, தளபதி அருள், ராளைபாபு, நாகராஜ், பாலவாக்கம் சரவணன், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செல்வராஜ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிசார்பில் முனுசாமி, கலந்துகொண்டு பாஜக மற்றும் அதிமுகவை கண்டித்து கோஷங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# பந்தலூரில் ஏகல் மகளிர் பயிற்சி மையத்தில் புற்று நோய் தினத்தினை முன்னிட்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி, பிப்.16-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் ஏகல் மகளிர் தையல் பயிற்சி மையத்தில் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு மகளிர்களை தாக்கும் புற்றுநோய்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன், மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியன சார்பில் நடைபெற்ற புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌசாத் தலைமை தாங்கினார். ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், தையல் பயிற்சி மைய ஆசிரியர் ராஜேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வட்டார மருத்துவ அலுவலர் மரு.கதிரவன் பேசும்போது தொற்றா நோய்கள் மூலம் அதிகம் இறப்புகள் ஏற்படுகிறது.



இதற்கு முக்கிய காரணம் விழிப்புணர்வு இன்மையும், அலட்சியமும், நமக்கு வராது அதீத நம்பிக்கையும் தான். இதுவே மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். புற்றுநோய் என்பது உடலில் நகம் முடி தவிர்த்து அனைத்து பகுதிகளில் வரும் வாய்ப்பு உள்ளது. மரபு சார்ந்து மற்றும் உடலில் ஏற்படும் மாற்றங்கள் உணவு பழக்கம் ஆகியன சார்பில் புற்றுநோய் பாதிப்பு ஏற்படும். புகையிலை பழக்கம் மூலம் வாய், தொண்டை, வயிறு, பெருங்குடல், சிறுகுடல் போன்றவையில் புற்றுநோய் வரும் வாய்ப்பு உள்ளது. அதுபோல் கர்ப்பப்பை மற்றும் கர்ப்பவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய், சிறுநீரக புற்றுநோய் உள்ளிட்டவை அதிகம் தாக்கும் அபாயம் உள்ளது. புற்றுநோய் குறித்து பெண் மருத்துவர் மற்றும் தொற்றா நோய் கண்காணிக்கும் செவிலியர்கள் மூலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

தற்போது தமிழக அரசு சுகாதாரத்துறை மூலம் புற்றுநோய் வராமல் தடுக்கும் நோக்கில் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நீலகிரியில் விரைவில் துவங்குகிறது. இதன் மூலம் வருங்காலங்களில் புற்றுநோய் தாக்கம் இல்லாமல் பாதுகாக்க முடியும். எனவே இதனை அனைவரும் தயக்கம் இன்றி போட்டு கொள்ள வேண்டும் என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது புற்றுநோய் வர உணவில் சேர்க்கும் இரசாயன சேர்மங்களும் காரணமாக அமைகிறது எனவே கடைகளில் வாங்கும் மசாலா பொருட்கள், குளிர்பானங்கள், உடனடி உணவுகள் உள்ளிட்டவை தவிர்க்க வேண்டும். பூண்டு, இஞ்சி உள்ளிட்ட உணவுகளை அடிக்கடி உணவில் சேர்த்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் தையல் பயிற்சி மைய பயிற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# சீத்தஞ்சேரி யில் பூண்டிவடக்கு ஒன்றிய திமுக சார்பில் மத்திய அரசை கண்டித்துகண்டன ஆற்பாட்டம்

திருவள்ளூர், பிப்.14-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சீத்தஞ்சேரியில் பூண்டி வடக்கு ஒன்றிய திமுக மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சார்பில் மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 12.02.2026 அன்று மாலை 5:00 மணியளவில் சீத்தஞ்சேரி பஜார்வீதியில் த திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் நடைபெற்றது

இந்த ஆற்பாட்டத்தில் மேலிட பொறுப்பாளர் மாவட்ட துணைச்செயலாளர் கதிரவன், மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் வி.பி.ரவிக்குமார், பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளார் ஜான்பொன்னுசாமி, அவைதலைவர் சிவய்யா, மாவட்டபிரிதிநிதி சீனிவாசலு, மற்றும் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்கள் சரசுபூபாலன், ரகுபதி, பாஸ்கர், மற்றும் விசிக சார்பில் மண்டல துணைச்செயலாளர் மு.ஏகாம்பரம், கருஞ் சிறுத்தைசுகுமார், தியாகு மற்றும் காங்கிரஸ், கம்னியூஸ்ட் கட்சிகள் கலந்து கொண்டு மத்திய பாஜக மற்றும் அதிமுக கட்சிக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆற்பாட்டத்தில் ஈடுபட்டனர் இந்த ஆற்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்துகொண்டனர்



■ அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றத்தில் அறங்காவலர்கள் பதவியேற்பு மற்றும் அறங்காவலர் குழு தலைவர் தேர்வு சிறப்பு கூட்டமாக நடைபெற்றது. ஆணையர் மற்றும் இணை ஆணையர் அவர்களின் உத்தரவுப்படி, திருப்பரங்குன்றம் துணை ஆணையர்/செயல் அலுவலர் முன்னிலையில், தேர்தல் அதிகாரியாக மதுரை உதவி ஆணையாளர் தலைமையில், திருப்பரங்குன்றம் ஆய்வாளர் உடனிருந்து கூட்டம் நடத்தப்பட்டது. இதில் ப. சத்யபிரியா ஒருமனதாக அறங்காவலர் குழு தலைவராக தேர்வு செய்யப்பட்டார். நிகழ்வில் திருக்கோயில் கண்காணிப்பாளர்கள், பணியாளர்கள், அர்ச்சகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு புதிய தலைவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.8 பொறியாளர் நகர் பகுதியில் புதிதாக கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதற்கான பணியினை ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மாநகராட்சி பொறியாளர்கள் உடன் உள்ளனர்.




# தஞ்சையில் மத்திய அரசை கண்டித்து திமுகவினர் ஆர்ப்பாட்டம்

தஞ்சை, பிப்.14-

திருவையாறு அருகே கோனேரிராஜபுரத்தில் தஞ்சை மத்திய மாவட்டம் தெற்கு ஒன்றிய தி.மு.க மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.கவையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

தெற்கு ஒன்றிய செயலாளர் கௌதமன் வரவேற்றார் , கொள்கை விளக்க அணி துணைச் செயலாளர் இலக்கியா தலைமை வகித்தார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், ஒன்றிய அவைத்தலைவர் தண்டாயுதபாணி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பொற்செல்வி கந்தவேல்,மாவட்ட பிரதி நிதிகள் சிபிஎம் ஒன்றிய குழு பழனியப்பா, விசிக ஒன்றிய செயலாளர் அரசுவணங்காமுடி மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர். அதேபோல் திருவையாறு வடக்கு ஒன்றியம் சார்பில் திமுக ஒன்றிய செயலாளர் சிவசங்கரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் திமுக நிர்வாகிகள் மாவட்ட சுற்றுச்சூழல் அணி தண்டபாணி முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் வெங்கடசாமி ஒன்றிய துணைச் செயலாளர்கள் நெல்சன் ராஜ் காமராஜ் ,சாரதா மதியழகன் ஒன்றிய பொருளாளர் கலியமூர்த்தி தலைமைக் கழக பேச்சாளர் ஆண்டவர் செல்வம் சிபிஎம் மாவட்ட விவசாய அணி தலைவர் ராம் செல்வி விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் முருகானந்தம் மதிமுக சாமிநாதன் உட்பட கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்

# “தவெகவுக்கு பெருகும் மகளிர் ஆதரவே திமுக ரூ.2000 கோடைகால சிறப்புத் தொகை வழங்கக் காரணம்” -விஜய்

சென்னை, பிப்.14-

“கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 வழங்க, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்துக்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே. திமுகவை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான்.” என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “வழக்கமாக மாதந்தோறும் 15ம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக இன்று 13ம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்?

புதிதாகக் கோடைக்



காலச் சிறப்புத் தொகை ரூ.2000 எனத் திடீரென அறிவித்தது எப்படி? இந்த ஆண்டு மட்டும்தான் கோடைக் காலம் வருகிறதா என்ன? இத்தனைக்கும் காரணம் வீதிக்கு வீதி மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு ஒலிக்கும் விசில் சத்தம்தான். குறிப்பாக, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்திற்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே இதற்குக் காரணம்.

இப்போதுகூடப் பாருங்கள். ஒன்று மட்டும் உறுதியாகத் தெளிவாகிறது. நாம் மட்டுமே இவர்களுக்கு அச்சமூட்டச் செய்யும் ஆகப்பெரும் வெற்றிக்கான மக்கள் சக்தி. அது மட்டுமா? இவர்களை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான்.

அதுமட்டுமா? திமுக. தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் தவெகவைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி செய்துள்ளார்.

எனவே, என்னருமைத் தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜய்யின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக் கொள்ளுங்கள். நம் ஆட்சி மலர்ந்ததும், அரசியல் ஆதாயத்திற்காகச் சுயநலமாகச் செயல்படும் இவர்களைப் போலன்றி, உண்மையான அக்கறையுடன் நம் மக்களுக்கு அனைத்து வகைகளிலும் அனைத்து வழிகளிலும் நல்லது மட்டுமே செய்வோம். அது உறுதி. திமுக அரசுக்குத் தேர்தல் தோல்விக்கான திகில் ஊட்டும் அளவிற்கு விசில் ஊதும் தமிழ்நாட்டு மகளிருக்கு என் மனமார்ந்த நன்றி” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# அகில இந்திய வேலை நிறுத்தும் மறியல் போராட்டம்

போடி பிப்.14-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மத்திய தொழிற்சங்கள் இன்று நாடு முழுவதும் பொது வேலை நிறுத்தத்தை முன்னிட்டு இன்று போடி நகரில் AITUC,INTUC,LLF, விவசாய சங்கம், விவசாய தொழிலாளர்கள் சங்கம், ஐக்கிய விவசாய சங்கங்கள் சார்பில் மறியல் போராட்டம் பழைய பேருந்து நிலையம் வ உ சி சிலையில் இருந்து பேரணியை AITUC தேனி மாவட்ட ஜவுளி பொது தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் N.ரவி முருகன் அவர்கள் துவக்கி வைத்தார் போடி நகர் தலைமை தபால் நிலையம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடைபெற்றது. போரா ட்டத்தின் நோக்கங்களை விளக்கி INTUC தேனி மாவட்ட தலைவர். ஜம்பு சுதாகர், விடுதலை சிறுத்தைகளின் கட்சி போடி சட்டமன்ற மாவட்டச் செயலாளர் இரா. மதன் வி.சி.க.மண்டல துணைச் செயலாளர் சு.சுருளி, நகர் காங்கிரஸ் தலைவர் KMS. முசாக் மந்திரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போடி நகரச்செயலாளர் K.சத்தியராஜ், ஒன்றிய செயலாளர் B. மணிகண்டன் AITUC தேனி மாவட்ட குழு உறுப்பினர் P. முருகேசன் AITUC கட்டுமான சங்கத்தின் மாவட்ட தலைவர் படையப்பா Cமுருகன், M.C.புரம் பேரூராட்சி துணைத் தலைவர் C.பஞ்சவர்ணம் ஆகியோர்களின் தலைமையில் மற்றும் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கம் எழுப்பி எதிர்ப்பை தெரிவித்தனர்.

# தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வீரபாண்டி கவுமாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா: ஏப்ரல் மாதம் 21ந் தேதி கொடியேற்றம்

தேனிவீரபாண்டி, பிப்.14-

தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வீரபாண்டி கவுமாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான திருவிழா வருகின்ற ஏப்ரல் மாதம் 21ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி மே 12ந் தேதியில் இருந்து மே 19ந் தேதி வரை 8 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது. இந்த திருவிழாவில் பக்தர்கள் தீச்சட்டி, ஆயிரம் கண்பானை, முடிகாணிக்கை, காது குத்துதல் போன்ற நேர்த்திக்கடன் செலுத்தவும், திருவிழாவை காணவும் தேனி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் தினசரி பல்லாயிரக்கணக்கானோர் வந்து செல்வார்கள். இந்த திருவிழாவிற்கு வரும் பக்தர்கள், பொதுமக்கள்



மற்றும் குழந்தைகள் பொழுது போக்கிற்காக எந்திர ராட்டினம் நடத்துதவதற்கான ஏலம் கோவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு இந்து சமய அறநிலையத்துறை திண்டுக்கல் மண்டல இணை ஆணையர் கார்த்திக் தலைமை தாங்கினார். உதவி ஆணையர் ஜெயதேவி, ஆய்வாளர் கார்த்திகேயன், வீரபாண்டி கோவில் செயல் அலுவலர் சுபீதா, நாராயணி, மேலாளர் பாலசுப்பிரமணியம், கணக்கர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏலத்தில் ஏலதாரர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கண்மலர் ஏலம் ரூ.5 லட்சத்து 87 ஆயிரம் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்த ஏலத்தில் 4 பேர் கலந்து கொண்டனர். இவற்றில் மாரிச்சாமி என்பவர் ரூ.5 லட்சத்து 75 ஆயிரத்துக்கு டெண்டர் மூலம் ஏலம் எடுத்துள்ளார். அதுபோல உணவு கூடம் நடத்துவதற்கான ஏலம் ரூ.38 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதில் 6 பேர் கலந்து கொண்டனர். இவற்றில் ராஜசேகர் என்பவர் ரூ.36 லட்சத்து 46 ஆயிரத்து 600க்கு டெண்டர் மூலம் ஏலம் எடுத்துள்ளார்.இந்த ஏலத்தில் முக்கியமானதான ராட்டினம் நடத்துவதற்கு ரூ.3 கோடியே 51 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதன் பின்னர் ஏல நிர்ணய தொகை படிப்படியாக குறைக்கப்பட்டு ரூ.3 கோடியே 35 லட்சம் என கோவில் நிர்வாகம் சார்பில் ஏலத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த ஏலத்தில் 6 பேர் கலந்து கொண்டனர். இந்த ஏலத்திற்கான டெண்டர் கவர் பிரிப்பதற்கு முன்பே ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் ராட்டினம் நடத்துவதற்கான நேரம் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை என்று புதிய நிபந்தனை விதிக்கப்பட்டு இருப்பதாக தகவல் தெரிய வருகிறது அந்த குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் ராட்டினம் இயக்கினால் கண்டிப்பாக ஏலத்திற்கான தொகையில் எடுக்க முடியாது என்று கூறி ஏலத்திலிருந்து சிலர் திடீரென வெளிநடப்பு செய்தனர். இதனைத்தொடர்ந்து ராட்டினம் இயக்குவதற்கான ஏலத்தை கோவில் நிர்வாகம் நிர்ணயித்த தொகைக்கு எடுக்க யாரும் முன் வராத காரணத்தால் ராட்டினம் நடத்துவதற்கான ஏலம் ஒத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து முடி காணிக்கை ஏலம் நடைபெற்றது. இதற்கான ஏலத்தொகை ரூ.14 லட்சத்து 40 ஆயிரம் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்த ஏலத்தில் 5 பேர் கலந்து கொண்டனர் இவற்றில் மாயி என்பவர் ரூ.14 லட்சத்து 50 ஆயிரத்து ஒன்றுக்கு டெண்டர் மூலம் ஏலம் எடுத்துள்ளார்.



# பல்லாவரத்தில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அதிமுகவைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு, பிப்.14-

ஒன்றிய அரசிடம் இருந்து எப்போதெல்லாம் ஆபத்து, பாதிப்பு வரும்போது திமுக கூட்டணி வீதிக்கு வருவதாக பேச்சாளர் சாதிக் பாஷா தெரிவித்தார்

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நிதி இல்லை 100 நாள் வேலை இல்லை பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக, துணை போகும் அதிமுகவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக பேச்சாளர் சாதிக்பாஷா, துணை மேயர் காமராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் தமிழ்மாறன், மதிமுக மாவட்ட செயலாளர் மா.வை மகேந்திரன், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் ஆர்.எஸ்.செந்தில்குமார், விசிக மாவட்ட செயலாளர் தமிழரசன், மண்டல குழுத் தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றி ஒன்றியரசை கண்டித்து கண்டன கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கழக பேச்சாளர் சாதிக்பாஷா பேசுகையில் திமுக ஏன் ஆர்ப்பாட்டம். செய்கிறது என்றால் எப்பொழுதெல்லாம் ஒன்றி அரசிடம் இருந்து ஆபத்து வருகிறதோ, பாதிப்பு வருகிறதோ அப்பொழுதெல்லாம் திராவிடகழமாக இருக்கட்டும், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட் முன்னேற்றகழமாக இருக்கட்டு, முஸ்லீம் இயக்கங்களாக இருக்கட்டும் அப்போழுது வீதிக்கு வந்த ஒரே கூட்டணி இந்த திமுக கூட்டணி என தெரிவித்தார். இதில் பம்மல் வடக்கு பகுதி செயலாளர் ஜெய்குமார், பொழிச்சலூர்ஊராட்சி தலைவர்கள், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் பகுதிகழக நிர்வாகிகள், வட்டகழக செயலாளர்கள், மகளிரணியினர் உட்பட 500 க்கும் மேற்பட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டனகோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கூட்டணி ஆட்சி குறித்து முதல்வர் தெளிவுபடுத்திய நிலையில் தனிநபர் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது: ஆர்.எஸ்.பாரதி பேட்டி



சென்னை, பிப்.14-

கூட்டணி ஆட்சி குறித்து முதல்வர் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், தனிநபர் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்று ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார். மக்கள் விரோத ஒன்றிய அரசை கண்டித்து, நாடு முழுவதும் ரயில் மறியல், முற்றுகை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நேற்று நடந்தன. அதன்படி, செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில், மக்கள் விரோத ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

சிறப்பு அழைப்பாளராக திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்றார். இதில், 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜ மற்றும் அதற்கு துணை போகும் அதிமுகவை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

பின்னர், ஆர்.எஸ்.பாரதி நிருபர்களிடம் கூறுகையில், 'கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது மோடி 8 முறை வந்தும் பலனளிக்கவில்லை. அதனால் அமித்ஷா, பியூஷ் கோயல் உள்ளிட்டோர் அடுத்தடுத்து தமிழ்நாட்டிற்கு வருவது குறித்து திமுகவிற்கு கவலையில்லை. கூட்டணி ஆட்சி குறித்து முதல்வர் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், தனிநபர் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது. ராகுல்காந்தி கேள்வி எழுப்பினால் அதற்கு பதில் அளிக்கப்படும்' என்றார்.

# அதிமுகவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தாம்பரம், பிப்.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நடத்தும் 100 நாள் வேலை ரத்து விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்கா ஒப்பந்தம் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த பாசிச பாஜக துணை போகும் அடிமை அதிமுகவையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் 12.02.2026 அன்றங மாலை சண்முகம் சாலையில் போராட்டம் நடைபெற்றது முன்னாள் மாவட்ட தலைவர் செங்கல்பட்டு மாவட்டம் காங்கிரஸ் கமிட்டி விஆர்.சிவராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், மாநகர பொருளாளர் விஜயரங்கன், பி.சதாசிவம் மாநகர துணை செயலாளர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன்,



ஆகியோர் முன்னிலை வகித்தனர் இதில் தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்

இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, மனித நேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் யாக்கூப், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி, கூட்டணி கட்சி தலைவர்கள் செயலாளர் தா.கிருஷ்ணன், பாலாஜி, எஸ் நாராயணன், எஸ்.ஷேக் அப்துல், ப.சாமு வேல் எபினேசர், எஸ்.கே.ஜாகிர் உசேன், பா.முத்தையன், இ.இளமாறன், பி.பொன் ராஜ், ஆர்.ராமகிருஷ்ணன் அக்பர், எம்.ஜாகிர் உசேன், பி.பால்நியூலின் மாமன்ற உறுப்பி னர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் கலந்து கொண்டு கோஷங்களை எழும்பினார்கள் இறுதியில் ஜ.ரவிக்குமார் நன்றி உரையாற்றினார்

# பழனியில் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், பிப்.14-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய கழக சார்பாக பழனி தாலுகா அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே மாரியப்பன் முன்னிலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் முத்துசாமி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் மாநில எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் கே ரவி மனோகரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசாமி தோழமைக் கட்சி நிர்வாகிகள் பாரதிய ஜனதா கட்சியின் ex மாவட்ட செயலாளர் கனகராஜ் பார்வர்டு பிளாக் கட்சி மாவட்ட செயலாளர் சபரி பாட்டாளி



மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வைரமுத்து தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் சண்முகநாதன் இந்திய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் அல்டாப் பேரூர் கழக செயலாளர் விஜய் சேகரன் சக்திவேல் சசிகுமார் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் அன்வர் தீன் மாவட்ட விவசாய பிரிவு செயலாளர் நடராஜன் பொதுக்குழு உறுப்பினர் ராஜா முகமது மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சதீஷ்குமார் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் அசோக் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் குகன் மாவட்ட மாணவர் அணி தலைவர் நவீன் ராஜா கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் நகர கழக நிர்வாகிகள் மேலும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் நன்றியுரை பழனி நகரக் கழக செயலாளர் முருகானந்தம் அவர்கள்

# திருத்தணியில் கிராம மக்களின் 125 நாட்கள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க நினைக்கும் திமுக அரசை கண்டித்து போராட்டம் முன்னாள் அமைச்சர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் அதிமுகவினர்

திருத்தணி, பிப்.14-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஒன்றிய அதிமுக சார்பில் கிராம மக்களின் 125 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை ஸ்டாலின் அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் என்று அதிமுகவினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திருத்தணி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்று திரண்டனர் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருத்தணி மேற்கு ஒன்றிய செயலாளர் இ.என். கண்டிகை ஏ. ரவி மற்றும் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆகியோரது முன்னிலையில் இந்த ஆர்ப்பாட்டம் தொடங்கியது இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர் அரக்கோணம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புச் செயலாளர் கோ.அரி, முன்னாள் அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.வி. ரமணா, ஆகியோர்கள் கண்டன உரை நிகழ்த்தினர்

அப்போது பேசிய கழக அமைப்புச் செயலாளர் கோ.அரி 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு



தமிழகத்திற்கு தேவையான திட்டங்களை எடுத்து வர திறமை இல்லாதவர்கள் இந்த திமுகவினர் மேலும் அப்போது தோழமை கட்சியாக பிஜேபி இருந்தாலும் நாடாளுமன்றத்தில் அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிமுக சார்பில் இருக்கும்போது நாடாளுமன்றத்தை முடக்கி நாடாளுமன்றத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தமிழகத்திற்கு எடுத்து வந்தது அதிமுக அரசுதான் தற்போது இந்த தொகுதியின் அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் தேர்தலுக்கு மட்டும் தான் வருவார் அவர் தேர்தலுக்கு உங்கள் முன்னால் வந்தால் அவரிடம் இந்த தொகுதிக்கு எந்த நல்ல விஷயமும் செய்யவில்லை எந்த ஒரு வளர்ச்சி திட்டமும் செய்யவில்லை என்று நீங்கள் கேள்வி கேளுங்கள் 2026ல் நல்ல திட்டங்களுடன் மக்களுக்கான ஆட்சியாக அதிமுக அரசு அமைவதற்கு அனைவரும் மக்கள் நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்த திமுக அரசை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று உரை நிகழ்த்தினார்

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ரமணா பேசுகையில்

தமிழகத்தின் நிதி இல்லை என்று தமிழக முழுவதும் திமுகவினர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் அதிமுகவினர் ஆர்ப்பாட்டம் அதிமுக தலைமை ஆர்ப்பாட்டம் அறிவித்த பிறகு ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் ஒரு ஆளும் கட்சியினர் இப்படி ஆர்ப்பாட்டத்தை அறிவித்துவிட்டு தெருவில் இறங்கி உள்ளனர் ஆளுங்கட்சியினர் எங்கேயாவது ஆர்ப்பாட்டம் செய்வார்களா என்று கேள்வி எழுப்பினார் திமுகவினருக்கு ஆட்சி நடத்த அருகதை இல்லை இந்த ஆட்சியை விட்டு போங்கடா என்று காட்டமாக ரமணா பேசினார்

இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முன்னிலையில்100 நாள் திட்டம் வழங்குவதற்கு நிதி இல்லை என்று 100 நாள் திட்டம் 125 நாள் திட்டத்தை சீர்குலைக்க பார்க்கும் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் திமுக அரசுக்கு எதிராக மேற்கொண்டனர்

இந்த நிகழ்வில் அதிமுகவின் தோழமைக் கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் தினேஷ், பாரதிய ஜனதா கட்சியின் சமூக ஊடகப்பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் மில்கா முத்து, தமிழ் மாநில காங்கிரஸ் மாவட்ட தலைவர் வெங்கடேசன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் பழனி, அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் நாராயணன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் கோதண்டன், நகர இளைஞரணி செயலாளர்கள் கேபிள் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி சௌமியா ராஜசேகர், புரட்சி பாரதம் கட்சியின் மேற்கும் ஒன்றிய செயலாளர் முனுசாமி, ஒன்றிய பொருளாளர் தாமோதரன், ஒன்றிய துணைச் செயலாளர் ஹேமநாதன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவு திருப்பூர் மாவட்டத்தில் அரசு புறம்போக்கு கனிம ஏல குத்தகை தொடர்பான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

திருப்பூர், பிப்.14-

திருப்பூர் மாவட்டம் கனிமங்களும் குவாரிகளும் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1957ன் பிரிவு 15 மற்றும் அரசாணை எம்.எஸ். எண்.21 இயற்கை வளங்கள் எம்எம்சி.1) துறை நாள் 31.07.2024 மற்றும் தமிழ்நாடு சிறுவகனிம சலுகை விதிகள் 1959 ன் விதி எண்.8 ன்படியும், அவ்வப்போது ஏற்படுத்தப்படும் அதன் திருத்தங்களின்படியும், திருப்பூர் மாவட்ட நிர்வாகம் இவ்வறிப்பில் கண்டுள்ளவாறு அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள 12 இனங்களில் உள்ள சாதாரணவகை கற்களை குவாரி செய்து பொதுப்பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் பொருட்டு (e-Auction) மின்னனு ஏலம் முறையில் கனிமக் குத்தகைக்கு அளிக்க ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறன்றன. மேலும், திருப்பூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்:06 நாள் 12.02.2026 தமிழ் மற்றும் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்:02 நாள் 12.02.2026 (ஆங்கிலம்) பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, கல் குவாரி குத்தகை மின்னனு ஏலத்தில் கலந்து கொள்ள உரிய படிவத்தில் ரூ.5,000/ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) விண்ணப்பக் கட்டணத்துடன் அளிக் கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியான நபர்கள் தொழில்நுட்ப அடிப்படையிலான பரிசீலனை மூலம் உறுதி செய்யப்பட்டு மின்னனு ஏலக்கேட்பில் கலந்து கொள்ள அனுதிக்கப்படுவார்கள்.

ஒப்புந்தப்புள்ளி ஆவணங்கள் (Tender Document) தகுதிகள் குறித்து நிபந்தனைகள், மின்னனு ஏலத்தில் கலந்து கொள்ள குறிக்கப்பட்டுள்ள நாள் மற்றும் நேரம் ஆகியவை தெரிவிக்கப்பட்டுள்ளன. விளக்கங்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம், மின்னனு ஏலம் தொடர்பான அறிவிக்கை, காலமுறை, முன்கொணர்வுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை வலைதள முகவரி website https://intenders.gov.in ல் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# மளிகை பொருட்கள் வாங்க வந்த 70 வயது மூதாட்டி இடமிருந்து பட்டப்பகலில் இரண்டு சவரன் தங்கச் செயின் பறிப்பு

## உதவ முன் வராத போலீசார்: கெஞ்சிய மூதாட்டி பரிதாபக் காட்சி

திருத்தணி, பிப்.14-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சியில் காமராஜர் மார்க்கெட் பகுதியில் மளிகைப் பொருட்கள் வாங்க வந்த ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் தாலுக்கா பள்ளியங்குப்பம் பகுதியில் மளிகை கடை நடத்தி வரும் ராஜம்மா என்ற எழுபது வயது மூதாட்டி இவரிடம் பட்டப் பகலில் இரண்டு பெண்கள் பேசுவது போல் தனியாக அழைத்துச் சென்று யாரும் இல்லாத மார்க்கெட் பகுதியில் அமர வைத்து கவரிங் தங்க நகையை மூதாட்டியின் கழுத்தில் மாட்டிவிட்டு இந்த செயின் எப்படி இருக்கிறது பார் என்று அவருக்கு தங்கச்செயின் என்று கூறிவிட்டு அவரது கழுத்தில் இருந்த

இரண்டு சவரன் தங்கச் செயினை லாபகமாக எடுத்துக்கொண்டு அந்த பகுதியில் நூதன முறையில் திருடிவிட்டு சென்றுள்ளனர் இவர்கள் சென்றவுடன் கழுத்தில் இருந்த தங்கச் செயினை பார்த்தவுடன் இது போலியானது என்று இது என்னுடைய இது




இல்லை என்று மூதாட்டி அலறியவாறு அவர்கள் ஏமாற்றி விட்டார்கள் இரண்டு பெண்கள் என்னை ஏமாற்றி சென்று விட்டார்கள் என்று அங்கிருந்து

குக்கரில் இட்டு அலறியவாறு மூதாட்டி பட்டப்பகலில் தனது இரண்டு சவரன் தங்கச் செயின் பறிகொடுத்து அந்த பகுதியில் இருந்த போலீசாரிடம் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்திற்கு குவிக்கப்பட்டு இருந்த போலீசாரிடம் கெஞ்சிய காட் சிகள் பரிதாபமாக இருந்தது ஆனால் மனமுகுந்து உடன டியாக போலீசார் இந்த மூதாட்டிக்கு உதவி செய்யவில்லை செய்தியாளர்கள் வீடியோ எடுப்பதை பார்த்தவுடன் போலீசார் மூதாட்டியை லாபகமாக அழைத்துச் சென்று ஆட்டோவில் அழைத்துச் சென்று காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர் பட்டப் பகலில் 50 போலீசார் இருக்கும்பொழுது மூதாட்டி இடமிருந்து இரண்டு சவரன் தங்கச் செயினை நூதன முறையில் இரண்டு பெண்கள் திருடி சென்ற சம்பவம் கொள்ளை அடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா ஆய்வு செய்து இரண்டு பெண்களைப் பிடித்து தங்கச் செயினை பறிமுதல் செய்து உடனடியாக மூதாட்டிக்கு உதவி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் போலீசாரிடம் கோரிக்கை வைத்தனர்.





# 100 நாள் வேலை திட்டத்தில் 125 நாளாக உயர்த்திய திட்டத்தை முடக்கிய விடியா திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

தேவகோட்டை, பிப்.14-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு புரட்சித் தமிழர், முன்னாள் முதல்வர், எடப்பாடியாரின் ஆணை க்கிணங்க மாவட்ட கழகச் செயலாளர் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் PR.செந்தில் நாதன் அறிவுறுத்தலின்படி விடிய அரசு ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் விதமாக 100 நாள் வேலை திட்ட பணிகளில் சம்பள பாக்கி, 100 நாள் வேலை 125 நாட்களாக உயர்த்துவதற்கு தடையாக உள்ளது. இந்தத் திட்டத்தில் 20 முதல் 30 நாட்கள் மட்டுமே சில நபர்கள் தவிர பணிகள் வழங்குவதாகவும் மேலும் வேலை செய்த மக்களுக்கு சம்பளம் வழங்காமலும், பொதுமக்களிடம் இந்த திட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக பொய் பிரச்சாரம் செய்யும் விடியா அதிமுக அரசை கண்டித்து என கண்டன முழக்கமிட்டனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கற்பகம்இளங்கோ, மாவட்ட மாணவரணி செயலாளரும் தேவகோட்டை நகர்மன்ற தலைவருமான சுந்தரலிங்கம், நகர் துணைத் தலைவர் ரமேஷ், முன்னாள் ஒன்றிய சேர்மன் பிர்லா கணேசன், ஒன்றிய செயலாளர்கள், தசரதன், முருகன், ஊராட்சி ஒன்றிய துணைச் சேர்மன் புதுக்குறிச்சி நடராஜன், மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை தலைவர் சர்வே ராஜேந்திரன், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் வழக்கறிஞர் கார்த்திகேயன், நகர அம்மா பேரவை செயலாளர் ஆறுமுகம், நகர மாணவரணி செயலாளர் வெங்கட், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் துரைராஜ், நகர மாணவரணி தலைவர் ஐயப்பன், நகர ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் தீபன் கட்சி, கலை இலக்கியப் பிரிவு முத்துராமலிங்கம், நகர் மன்ற உறுப்பினர்கள் லாவண்யா வீரபாண்டி, வடிவேல் மற்றும் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# ஒன்றிய அரசை எதிர்த்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்

நீலகிரி, பிப்.14-

ஒன்றிய அரசை எதிர்த்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு தலைமைப் கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு, தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன முழக்கமிட்டு, ஆர்ப்பாட்டத் தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் காளிதாசன், குன்னூர் ஒன்றிய துணைச் செயலாளர் பழத்தோட்டம் ராமசாமி,மகாலிங்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் விக்னேஷ், BLA 2 நிர்வாகிகளான ஜீவா என்கிற சிவராஜ், ரஜினி, ராஜரத்தினம்,செல்வ ராஜ் ,முருகவேல், மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், செயல்வீரர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பி கண்டனத்தை தெரிவித்தனர்.




■ பெரம்பலூர் மாவட்டத்தின் 2030ஆம் ஆண்டிற்கான வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில், "என் ஊர்... என் கனவு திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான கருத்தரங்கம் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு வளர்ச்சி திட்டம் குறித்து பேசினார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மிருணாளினி, சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், அனைத்து துறைசார் அலுவலர்கள், துறைசார் வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டு எதிர்கால வளர்ச்சிக்கு கலந்தாலோசித்தனர். தொடர்ந்து மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் கனிம வள உயர் அலுவலர்கள், கனிம அறக்கட்டளை உறுப்பினர்கள் பொதுமக்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பணியாற்றும் அலுவலர்களுக்கான முதல் நிலை பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது

நீலகிரி, பிப்.14-

எதிர்வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், தேர்தல் பணியாற்றும் மண்டல அலுவலர்கள் மற்றும் காவல் அலுவலர்களுக்கான முதல் நிலை பயிற்சி வகுப்பு, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது: எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டலங்களை மூன்று முறை சென்று பார்வையிட்டு, அங்குள்ள வாக்கு சாவடி மையங்களை பார்வையிட வேண்டுமெனவும், மூன்றாம் பாலினத்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், மூத்தகுடி வாக்காளர்கள் போன்றவர்களை சந்திக்க வேண்டும் எனவும், அவர்கள் வாக்களிக்க ஏதேனும் இடையூறுகள் உள்ளதா எனவும் ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும், முதல் கணக்கெடுப்பு அறிக்கையினையும், வாக்குச்சாவடிகளில் அடிப்படை தேவைகளான மின்சாரம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகள்



சென்று வர ஏதுவாக சாய்தள வசதி ஆகியவை உள்ள னவா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு, அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வாக்கு செலுத்துவது தொடர்பாக ஏதேனும் இடையூறுகள் இருப்பின் அதனை சரிசெய்வது குறித்து தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும் எனவும், காவல் துறை அலுவலர்கள் மண்டல அலுவலர்களுடன் தேர்தலில் பணியில் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இப்பயிற்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர்நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்திரராஜன், வாக்குப்பதிவு அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, வாக்காளர் பதிவு அலுவலர்கள் / வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.டினு அரவிந்த் (உதகை), குணசேகரன் (கூடலூர்), தேர்தல் தனி வட்டாட்சியர் சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பத்திரம் காணவில்லை**
**அ/நக/ எண்: 5595/2021**
**புகார் எண்: CNK26053259**

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தாலுகா, சரஸ்வதி நகர், க.எண்.5/499ல் வசித்துவரும் மனோகரன் மனைவி M.கண்ணம்மாள் கடந்த 05.02.2026ம் தேதி பட்டா மாறுதல் காரணமாக திருவெறும்பூர் தாலுகா அலுவலகம் சென்ற போது அருகேயுள்ள கணேசா ரவுண்டானா அருகே ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது தானசெட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண் 5595/2021) தவறி விட்டது. ஆன்லைன் மூலமாக கடந்த 07.02.2026 அன்று திருவெறும்பூர் காவல்நிலையத்தில் ஆன்லைன் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பத்திரம் யாரேனும் கண்டெடுத்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது கீழ் கண்ட முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவண் :
M.கண்ணம்மாள்
க/ஷ.மனோகரன்
5/499, சரஸ்வதி நகர்,
வடக்கு காட்டூர்,
திருவெறும்பூர் தாலுகா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
செல்: 90433 61718.

# தாராபுரத்தில் அசோக் லேலண்ட் இலகு ரக வர்த்தக வாகன டீலர்ஷிப் மெகா தொடக்கம்: மீனாட்சி மோட்டார்ஸ் மூலம் விற்பனை, சேவை, உதிரிபாகங்கள் ஒரே மையத்தில்

தாராபுரம், பிப்.14-

இந்தியாவின் முன்னணி வர்த்தக வாகன உற்பத்தியாளரான அசோக் லேலண்ட் நிறுவனம், தனது இலகு ரக வர்த்தக வாகனங்களுக்கான புதிய டீலர்ஷிப்பை தாராபுரத்தில் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் இது அசோக் லேலண்டின் 15 வது இலகு ரக வர்த்தக வாகன விற்பனை டீலர்ஷிப் மையமாகும்.

தாராபுரம் புறவழிச் சாலை, வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகே உள்ள ஐஸ்வர்யா நகரில், "மீனாட்சி மோட்டார்ஸ்" பெயரில் இந்த டீலர்ஷிப் செயல்படுகிறது. இங்கு வாகன விற்பனை, சேவை மற்றும் உதிரிபாகங்கள் ஆகிய அனைத்து வசதிகளும் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை அனுபவத்தை வழங்கும் வகையில், இந்த மையத்தில் மேம்பட்ட கருவிகள், சக்கர சீரமைப்பு வசதி, வேகமான சேவை பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. படா தோஸ்த், தோஸ்த், பார்ட்னர், மிடிஆர் உள்ளிட்ட பல்வேறு இலகு ரக வர்த்தக வாகனங்கள் விற்பனை செய்யப்படுவதுடன், பழுது நீக்கம் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.




டீலர்ஷிப் தொடக்க விழாவில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் இலகு ரக வர்த்தக வாகனப் பிரிவு கௌரவ தலைமை விருந்தினராக கலந்து கொண்ட ஸ்ரீகாந்த்ராஜா பேசுகையில்,

"அசோக் லேலண்ட் நிறுவனத்திற்கு தமிழகம் எப்போதும் முக்கியமான சந்தையாக திகழ்கிறது. தாராபுரத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த புதிய டீலர்ஷிப் மூலம், மாநிலத்தில் எங்களது வர்த்தகம் மேலும் வலுப்பெறும். தோஸ்த் ரேஞ்ச் மற்றும் எங்களது சமீபத்திய தயாரிப்பான படா தோஸ்த் வாகனங்களின் வெற்றிக்கு, வலுவான உற்பத்தியும், பரவலான நெட்வொர்க்கும் முக்கிய காரணங்களாக உள்ளன. சிறந்த மைலேஜ், தரமான செயல்திறன் மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகளின் காரணமாக எங்களது தயாரிப்புகள் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன," என்றார்.

மேலும், "விற்பனை, சேவை, உதிரிபாகங்கள் என மூன்று அம்சங்களையும் ஒருங்கிணைத்துள்ள எங்களது புதிய பங்குதார நிறுவனமான மீனாட்சி மோட்டார்ஸ், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள-வாடிக்கையாளர்களை நாங்கள் இன்னும் நெருக்கமாக அணுக முடியும். உலகின் முன்னணி 10 இலகு ரக வர்த்தக வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாக திகழ வேண்டும் என்ற எங்களது இலக்கை விரைவாக அடைவதற்கு இந்த டீலர்ஷிப் உதவியாக இருக்கும்," என தெரிவித்தார்.

மிகவும் மலிவான விலையில், உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தை வழங்கும் வகையில், அசோக் லேலண்டின் இலகு ரக வர்த்தக வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன. தற்போது நாடு முழுவதும், 4 லட்சத்துக்கும் மேற்பட்ட இலகு ரக வர்த்தக வாகனங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், அம்மன் ஆட்டோ நிர்வாக இயக்குனர் சங்கர், அசோக் லேலண்ட் அலுவலக பொறுப்பாளர்கள் அகிலன், முத்துகிருஷ்ணன், ஏ.ஜி.எம். செழியன், திருப்பூர் அசோக் லேலண்ட் மேலாளர் செந்தில்குமார், தாராபுரம் அசோக் லேலண்ட் மேலாளர் பிரோஸ், அலெக்சாண்டர், பங்குதாரர்கள் திருஞானம், சாமிநாதன், தெற்கு மோட்டார் பழுதுபார்ப்போர் சங்க தலைவர் சரவணன், செயலாளர் மணிகண்டன், பொருளாளர் சரவணன், நியூ டீசல் குமார், தியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடக்க விழாவை முன்னிட்டு, வரும் 10 நாட்களுக்கு சிறப்பு சலுகைகள் அறிவிக்கப் பட்டுள்ளன. அதன்படி, அதே நாள் வாகன டெலிவரி, உதிரிபாக ங்களில் 5 சதவீதம் தள்ளுபடி, லேபர் கட்டணத்தில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. மேலும், பாடி ஷாப், டிங்கரிங், பெயிண்டிங், எஃப்சி வேலைகள் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் உடனுக்குடன் செய்து தரும் வகையில், தாராபுரத்தில் இந்த புதிய டீலர்ஷிப் அமைக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161